தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.04.2026

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண்கள். SA 19348/F/2023 & SA 20609/F/2023**

திரு.த.சக்திவேல், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம்(கோவை) லிமிடெட், -- பொது அதிகார அமைப்பு
எண்.37, மேட்டுப்பாளையம் சாலை,
கோயம்புத்தூர் மாவட்டம்-641 043.

**ஆணை**

இவ்வழக்குகளின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.த.சக்திவேல், அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திரு.க.சி.கண்ணன், துணை மேலாளர் (கட்டிடம்-கூட்), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(கோவை) லிமிடெட், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 12.08.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுக்களில், “தங்கள் நிர்வாகத்தில் கடந்த 05.07.2023 அன்றைய நாளில் 1746/இ3அ/பது1/த அபோக(கோ)/2023, நாளிட்ட உத்தரவில் உடுமலைகிளையில் இருந்த திருப்பூர் 1 கிளைக்கு நிர்வாக காரணங்களுக்காக மாறுதல் செய்யப்படுகிறார் என்று கூறிய உத்தரவுக்கு நிர்வாக காரணங்களுக்கான விவரம் வழங்கவும்” என்ற தகவலை வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மேட்டுப்பாளையம் சாலை, கோயம்புத்தூர் மாவட்டம்-641 043 அவர்களுக்கு மனுக்களை தாக்கல் செய்துள்ளார்.

3. அம்மனுவைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், மேட்டுப்பாளையம் சாலை, கோயம்புத்தூர் மாவட்டம்-641 043 அவர்கள் கடித எண்.8532/த1/17493/தஅஉச/தஅபோக(கோ)/2023, நாள் 12.09.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கியுள்ளார். மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என 13.09.2023 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் முதல் மேல்முறையீட்டு மனுக்களை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல்கள் பெறப்படாததால் 04.11.2023 தேதியிட்டு பிரிவு 19(3)-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களின் அடிப்படையில் இவ்வழக்குகள் 01.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து கடித எண்.3532/த1/17493/தஅஉச/தஅபோக(கோ)/2023, நாள் 12.09.2023, மற்றும் கடித எண்.9173/C1059/த1/1065/தஅஉச/தஅபோக(கோ)/2023, நாள் 23/11/2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்டு ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலையும் இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, சரியான தகவல்கள் கடித எண்.3532/த1/17493/தஅஉச/தஅபோக(கோ)/2023, நாள் 12.09.2023, மற்றும் கடித எண்.9173/ C1059/த1/1065/தஅஉச/தஅபோக(கோ)/2023, நாள் 23/11/2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்டுள்ளது என்று ஆணையம் பதிவு செய்து, ஏற்றுக்கொள்கிறது. இதுகுறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (01.04.2026) ஆஜராகத் தவறியுள்ளார். **எனவே, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுக்களின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்கள். SA 19348/F/2023 & SA 20609/F/2023</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(கோவை) லிமிடெட்,
எண்.37, மேட்டுப்பாளையம் சாலை,
கோயம்புத்தூர் மாவட்டம்-641 043.

<u>**மனுதாரர்**</u>

திரு.த.சக்திவேல்,
த/பெ.தங்கவேல்,
எண்.8/79, கிளுவன்காட்டூர்,
எலையமுத்தூர் (அஞ்சல்),
உடுமலைப்பேட்டை தாலுகா,
திருப்பூர் மாவட்டம்-642 154.

Copy to: File NS/PA-